# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. உண்மையான ஆராதனை எது? 1
2. பரிசுத்த ஆவியானவரை அறிமுகப்படுத்துகிறோம் 9
3. பிள்ளைப் பேற்றினாலே பெண்கள் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்கள்? 13
4. உங்களிடமே பேசிப்பாருங்களேன் 15
5. கிறிஸ்துவின் சபை ஒரு பிரிவினைக் கூட்டமா? 18
6. ஞானஸ்நானம்கொடுக்க மறுக்கலாமா? 19
7. ஆவி, ஆத்துமா, சரீரம் 22
8. ஆகிலும், உன் பேரில் எனக்குக் குறை உண்டு 25
9. பயங்கர யோசனை 27
10. சிலவற்றை மறப்பதே சிறந்தது 28

**THIRUMARAI AASAAN**

Editor :
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 OCTOBER 1994 Issue - 10

## ஆசிரியவுரை

# உண்மையான ஆராதனை எது?

'மின்னுவதெல்லாம் பொன் அல்ல', 'வெளுத்தது எல்லாம் பால் அல்ல' என்று முதுமொழிகள் உண்டு. மின்னுதல் பொன்னுக்குண்டான குணங்களில் ஒன்று. வெண்மையாக இருப்பது பாலுக்குண்டான பண்புகளில் ஒன்று. ஆனால் மின்னுகின்ற எல்லாமே தங்கத்திற்குரிய சிறப்பைப் பெற முடியுமா? அல்லது வெண்மையாக இருக்கின்ற எல்லாமே பாலின் தன்மையைத்தான் அடையமுடியுமா? ஏதாவது ஒரு குணம் மட்டுமே ஒரு பொருளுக்குண்டான மொத்தப் பண்புக்குப் பிரதிநிதியாக இருக்கமுடியாது. எல்லாக் குணமும், தன்மையும் ஒன்றுசேரும் போதுதான், ஒரு பொருளின் ஒட்டுமொத்தச் சிறப்பு வெளித்தெரியும். இந்தக் கருத்தை அனைவரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

இதைப்போலத் தான் ஆராதனையும்கூட. ஆராதனைக்கென்று சில ஒழுங்குகளும், கட்டளைகளும் நிச்சயமாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் ஒன்றுசேரச் செய்யப்படும்பொழுது தான் ஆராதனையின் மேன்மை வெளிப்படும். அதன்மூலம் பயனும் கிட்டும். இவைகளை விடுத்து ஆராதனை என்ற பெயரில் ஒழுங்குகளும், கட்டளைகளும் புறக்கணிக்கப்பட்டு மீறப்படுமானால், ஆராதனைகள் அர்த்தமற்ற சடங்குகளாகிவிடும்.

ஆராதனை என்பது பயமும், பக்தியும் ஒன்று சேர்ந்த நிலையில் செய்யப்படும் ஒரு செயல். உலகெங்கிலும், ஞாயிறுதோறும் கணக்கிலடங்காத ஆராதனைகள், தேவனைத் துதிக்கும்படியாக ஏறெடுக்கப்படுகின்றன. ஆனால் எல்லாமே தேவனால் அங்கீகரிக்கப்படுகிறதா என்பது கேள்விக்குரித்தான காரியம்.

ஆராதிக்கிற அனைவரும் ஆசைப்படுவதைப் போல், எல்லா ஆராதனைகளும் ஏற்றுக் கொள்ளப்படுவது உண்மையானால், ஏற்றுக் கொள்ளப்படாத வேற்று ஆராதனைகளும் உண்டு என வேதாகமம் ஏன் பட்டியலிட்டுக் காட்டவேண்டும்? வெளிப்படுத்தப்பட்ட ஒழுங்குகளுக்கும் கட்டளைளுக்கும் விரோதமான ஆராதனைகள் மனிதனால் ஏறெடுக்கப்படும் என்று தேவன் எதிர்பார்த்ததாலா?

சரி, நீங்களும், நானும் தேவனை ஆராதிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். ஆனால், உண்மையாக ஆராதித்தால் மட்டுமே தேவனிடத்திலிருந்து இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளமுடியும். அப்படியானால் எது உண்மையான ஆராதனை எனக் கண்டறிய தேவனுடைய வார்த்தைக்குச் செல்வது தான் செம்மையானது, செல்வோமா?

## வீணான ஆராதனை

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனிதனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, 'வீணாய்' எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாகச் சொல்லியிருக்கிறான் என்றார். (மத். 15:8,9). ஏசாயா தீர்க்கன், கிறிஸ்துவின் காலத்திற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்தவன். அவன் தன்னுடைய காலத்து மக்களின் நிலையைப் படம்பிடித்துச் சொல்லியதை, கிறிஸ்துநாதர், தன்னுடைய காலத்து மக்களின் மனநிலைக்கு எடுத்துக் கொள்கிறார். கிறிஸ்துவின் காலத்தில் இருந்த அதே நிலை, இன்று மீண்டும் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் தொடர்கிறது. என்னே பரிதாபம்!

'வீண்' என்ற வார்த்தையின் பொருள், 'பிரயோசனமற்ற', 'எதற்கும் லாயக்கற்ற' என்பதே. எதற்குமே லாயக்கற்ற ஒரு காரியத்தைச் செய்பவன் மதி கெட்டவனே. மதிகெட்டுப் போய் பிரஜோயனமற்ற ஒரு ஆராதனையைச் செய்வதில் என்ன நன்மை கிடைக்கும்? தங்களை பக்திமான்களென்று காட்டிக் கொள்ள மிகுந்த சிரமப்பட்ட பரிசேயர், வேதபாரகர் இவர்களுடைய ஆராதனையை, கிறிஸ்துவானவர் வீணானது என ஏன் சொன்னார்?

இதோ மூன்று காரணங்கள். 1) தங்கள் உதடுகளினால் அவரைக் கனம் பண்ணினார்கள். 2) அவர்கள் இருதயம் தூரமாயிருந்தது. 3) மனிதனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தார்கள். தேவனுக்காகச் செய்யும் எந்த காரியத்திலும் 'இருதய நிலை'தான் மிகவும் முக்கியமானது. அதை அடிப்படையாக வைத்துதான் ஏற்றுக்கொள்வதோ, நிராகரிக்கப்படுவதோ நிர்ணயிக்கப்படுகிறது.

உதடுகளின் பொய்யான புகழ்ச்சிக்கு மயங்க அவர் மனிதர் அல்ல. மனிதனுடைய உள்ளத்திலிருப்பது அவருக்கு நன்றாகவே தெரியும். (யோவா 2. 25).

தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இன்றைக்கு கணக்கிலடங்காத மனித கோட்பாடுகள் 'ஆராதனைக்குள்' நுழைந்துவிட்டது. இவைகளில் சிலவற்றை தன்னுடைய அறிவுக்குறைவினால் 'அறியாமலும்', பலவற்றை தன்னுடைய ஆர்வம் மிகுதியினால் தேவனுக்குப் பிரியமாயிருக்குமோ என நினைத்து 'அறிந்தும்' புகுத்திவிட்டான் மனிதன். இவ்விதமாய் நுழைந்த மனிதக் கோட்பாடுகள், சில நூறு ஆண்டுகள் பழக்கத்திலும் வழக்கத்திலும் வந்துவிட்டபடியால், உண்மை நிலையை உணர்ந்து சீர்படுத்திக் கொள்ள முடியாத அளவுக்கு மனிதன் சென்றுவிட்டான். வேதாகமத்திற்கு, குறிப்பாக இன்று நம்மை கட்டுப்படுத்தும் புதிய பிரமாணத்திற்கு ஒவ்வாத மணி அடிப்பது, தூபம் காட்டுவது, பாவ அறிக்கை, விசுவாசப்பிரமாணம், இசைக்கருவிகள், ஆடிப்பாடுதல் இப்படி என்னும் பல சடங்குகள் மனிதனால் ஆராதனைக்குள் திணிக்கப்பட்டவைகளே. இவைகளுக்கெல்லாம் புதிய பிரமாணத்தில் ஆதாரம் எங்கே உள்ளது? பாரம்பரியப் பழக்கங்களே அல்லாமல் வேறென்ன?

இன்றைக்கு மெய்க் கிறிஸ்தவம் தழைக்க முடியாமல் தடுமாறுவதற்கு முக்கியக் காரணம் 'பாரம்பரியமே'. தான் பழகி விட்ட ஒரு செயல், தவறு என்று தெரியும்பொழுது கூட அதை விட்டொழிக்க மனிதன் மிகுந்த சிரமப்படுகிறான். தன்னுடைய குடும்ப காரியங்களில், வரவு செலவுகளில், தவறு நடந்துவிட்டது, அதனால் பாதிப்பு வரும் என்று தெரியவரும்பொழுது அவசரமாகச் செயல்பட்டு தன்னைத் திருத்திக் கொள்ளும் மனிதன், ஆவிக்குரிய காரியங்களில் சாவகாசமாகக்கூட, நேர்ந்துவிட்ட தவறை திருத்திக் கொள்ள முனைவதில்லையே, ஏன்? பாரம்பரியத்தில் ஏற்பட்டுவிட்ட பிடிப்பு. மோசேயின் பிரமாணத்தைக் காட்டிலும் பாரம்பரியத்தினால் ஏற்பட்ட பழக்கம் பரிசேயருக்கும், வேதபாரகருக்கும் பெரிதாய் பட்டபடியினால் தானே, அவர்களைப் பார்த்து, மாயக்காரரே! உங்களுடைய ஆராதனை வீண் என்றார். (மத். 15 : 6, 7).

நண்பரே! நம்முடைய நிலை என்ன? நம்முடைய ஆராதனை எப்படிப்பட்டது? நம்மையும் பார்த்து உலகமீட்பர் 'மாயக்காரரே' என அழைக்கவேண்டுமா? அல்லது புதிய பிரமாணத்தில் சொல்லப் பட்டிருக்கும் தேவ ஆலோசனைகளை ஏற்று நடக்கப்போகிறோமா? நேரத்தை வீணாக்கும் வீண் ஆராதனையை விரட்டியடிப்போம்.

## அறியாமல் செய்யப்படும் ஆராதனை

நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்கிறார் (அப் 17 : 23) அத்தேனே பட்டணத்தில் பவுலடியார், சீலா, தீமோத்தேயு இவர்களின் வருகைக்காக காத்திருக்கிறார். காத்திருக்கும் தருணத்தில் அத்தேனே பட்டணத்தைச் சுற்றி வந்து ஜனங்களின் ஆன்மீக நிலையை அறிந்து கொள்ள முற்படுகிறார். (அப் 17 : 16). பிறகு புகழ்பெற்ற "மார்ஸ் மேடையின்" மீது நின்று பிரசங்கிக்கிறார். அந்த சிறப்புமிக்க பிரசங்கத்தில் தான் "அறியாமல் செய்யப்படும் ஆராதனையைக்" கோடிட்டுக் காட்டுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலின் காலத்தில் ரோம சாம்ராஜ்யத்தில் இரண்டு வகையான தத்துவங்கள் இருந்தன. ஒரு தத்துவத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் 'எப்பிக் கூரர்' என்றும், மற்றொரு தத்துவத்தால் கவரப்பட்டர்கள் 'ஸ்தோயிக்கர்' எனவும் அழைக்கப்பட்டனர். பவுலுடைய மார்ஸ்மேடைப் பிரசங்கத்தைக் கேட்டவர்களில் இந்த இரண்டு தத்துவங்களைச் சேர்ந்த ஞானிகளும் அடங்குவர் (அப் 17 : 18).

அப். 17-ம் அதிகாரத்தில் அறியாமல் ஆராதிக்க வந்தவர்களில் ஞானிகளும் அடங்குவர். அறிவு நிறைந்தவர்கள் எப்பொழுதும் ஆவிக்குரிய காரியங்களைச் சரியாகச் செய்வதில்லை போலும். உலக ஞானத்திற்கும், தேவனுடைய காரியங்களுக்கும் சம்பந்தமில்லை (1 கொரி 1 : 25) என்று பவுலடியார் கொரிந்து பட்டணத்து மக்களுக்குச் சொல்கிறார். அத்தேனே பட்டணத்தாரின் 'அறியாத ஆராதனை' திருத்தப்பட வேண்டுமென்று பவுல் சுட்டிக் காட்டுகிறார். அறியாமல் தவறு செய்தாலும் அது தவறுதானே." Ignorance of law is not an excuse' என்று சொல்வார்கள். அதாவது, சட்டத்தை அறியாமல் இருப்பது 'சட்டத்தின் முன் மன்னிப்பாகாது. சட்டத்தை அறிந்து கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்து வாழ்வது ஒரு குடிமகனின் கடமை. அது உண்மையானால், தேவனை ஆராதிக்கும் நாம், ஆராதனைக் குண்டான ஒழுங்குகளை, சட்டங்களை அறிந்து கொள்வது அவசியம் தானே. அவசியம் மாத்திரம் அல்ல, தவறு இருக்கும் பட்சத்தில் திருத்திக் கொள்வது அதைவிட முக்கியமானது.

அத்தேனே, பட்டணத்து அறிவாளிகள், பவுலின் பிரசங்கத்தை ஏற்றுக் கொண்டார்களா? வசனம் 17 : 34 'ஒரு சிலர்' தான் ஏற்றுக் கொண்டார்களென்று காண்கிறோமே. இன்றும், உலகமெங்கிலும் கடவுளைப் பிரியப்படுத்துகிறோமென்று விதவிதமான பூஜைகள், பஜனைகள், தொழுகைகள் மற்றும் ஆராதனைகள் ஏறெடுக்கப்படுகின்றன. இவைகளனைத்தும் ஆராதனைச் சட்டத்துக்குள் வராத பட்சத்தில் பயனற்றவையே.

சரி, நம்முடைய ஆராதனை எப்படிப்பட்டது? அறிந்து, புரிந்து ஆராதிக்கிறோமா? தேவன் நமக்குக் கொடுத்துள்ள அறிவை சரியான நோக்கில் பயன்படுத்தாத பட்சத்தில், அந்த அறிவினால் பயனேதுமில்லை. அறியாத ஆராதனை அர்த்தமற்றது. அறியாத ஆராதனையை நம் அகராதியிலிருந்து அகற்றுவோம்.

### சுய இஷ்டமான ஆராதனை

'இப்படிப்பட்டதான போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. (கொலோ 2:23) மனிதன் தன் சொந்த விருப்பத்தின்படி ஆராதிப்பது தான் சுய இஷ்டமான ஆராதனை' என்பது. தன்னுடைய விருப்பம் என்று சொல்லும் பொழுதே, தேவனுடைய சித்தம், அங்கே இல்லையென்பது தானே அதன் பொருள். தேவனுடைய சித்தத்தின் கீழ் வராத ஒரு ஆராதனையை, அவர் எப்படி ஏற்றுக் கொள்வார்?

தேவ சித்தத்தை ஏற்றுக் கொண்டு நடவாமல், நம்முடைய விருப்பப்படி செய்யும்பொழுது, நாம் சர்வவல்ல தேவனின் அநந்த ஞானத்திற்கு சவால் விடுவதாகத் தானே இருக்கும். அவருடைய வெளிப்பாடுகளை, திட்டங்களை எதிர்ப்பதற்கு இதைவிடச் சிறந்த வழி ஏதும் இல்லை. சர்வ ஞானியின் ஞானத்துக்கு சவால்விட்டு, அவருடைய திட்டங்களை எதிர்க்கவா தேவன் நம்மை இப்பூவுலகில் படைத்தார்? இல்லை, இல்லவே இல்லை.

உயர் மட்டக் கமிட்டியின் தீர்மானப்படியோ, மெஜாரிட்டி மக்களின் விருப்பப்படியோ ஆவிக்குரிய காரியங்களில் திருத்தங்களையும், மாற்றங்களையும் கொண்டு வருவது 'சுய இஷ்டமே'. இவை தவிர கூட்டவும், குறைக்கவும், ஒட்டவும், வெட்டவும் நமக்கு அதிகாரம் யார் கொடுத்தது? அறிவின் மிகுதியும், ஆர்வத்தின் உச்ச கட்டமும் நம்மை ஆவிக்குரிய அழிவுக்கு அழைத்துச் சென்றுவிடக் கூடாது.

தேவனுடைய வார்த்தைகள் நமக்கு விளங்கும்படியாகவே கொடுக்கப்பட்டுள்ளது. (உபா 30:11.14) விளங்கும்படியாக கொடுக்கப்பட்டுள்ளதெனில் நம்முடைய ஆராதனை முறைகளில் பெருத்த முரண்பாடு காணப்படுகிறதே ஏன்? வேதாகமம் ஆராதனையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையா? சொன்னது புரியவில்லையா? புரிந்தது எனில் ஏன் இந்த நிலை? எங்கோ தவறு நடக்கிறது.

தவறுக்குச் சொந்தக்காரர்கள் நம்மை வழி நடத்தினவர்களும் நாமும் தான், சந்தேகமில்லை. ஆனால், நியாயத் தீர்ப்பில், நாம் வழி நடத்தினவர்கள் மீது பழிபோட முடியாது. (யோவா 12 : 48) 'சுய

இஷ்டத்தை' எடுத்துப் போட்டு, 'தேவ சித்தத்திற்கு' நம்மைக் கீழ்ப்படுத்துவோம். சுய இஷ்டம் ஒரு போதும் நம்மை நீதியின் பாதைக்கு அழைத்துச் செல்லாது. பரமப் பிதாவின் சித்தம் மட்டுமே பரலோகத்திற்கும் பாதை காட்டும், அந்தப் பாதையில் வெற்றி நடை போடுவோம்.

### உண்மையான ஆராதனை

'தேவன் ஆவியாயிருக்கிறார்', அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோவா 4 : 24) சமாரியா நாட்டில், சீகார் என்னுமிடத்தில் யாக்கோபின் கிணறு உள்ளது. ஊழியத்தினிமித்தம் மேற்கொண்ட பிரயாணக் களைப்பிற்கு இளைப்பாற கிணற்றண்டைக்கு கிறிஸ்து வந்தார். (யோவா 4 : 6). அப்பொழுது அங்கு வந்த சமாரிய ஸ்ரீதியுடன் நடந்த உரையாடலில் தான் இந்த வசனம் வருகிறது.

தன்னுடைய நீண்ட உரையாடலில் கிறிஸ்துவானவர், சாதாரண மனிதர் அல்ல. அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதை அறிந்து கொள்கிறாள். (யோவா 4 : 19). தனக்குள்ளாக இருந்த சந்தேகத்தைப் போக்க சரியான நபர் கிடைத்தார் என நினைத்ததாலோ என்னமோ, ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறாள். உரையாடல் நடந்த இடத்திற்கு அருகாமையில் இருந்த மலையில் ஆராதிப்பது சரியா? அல்லது எருசலேமில் ஆராதிப்பது சரியா? என்பதே கேள்வி.

சமாரியர்கள் பழைய பிரமாணத்தில், ஆகமங்கள் என அழைக்கப்படுகின்ற முதல் 5 புத்தகங்களை ஏற்றுக் கொண்டு நடப்பவர்கள். இந்த மலை என்று சொன்ன இடம், சமாரியர்களுக்கு முக்கியமான, மத உணர்வுகளோடு சம்மந்தப்பட்ட இடம். அந்த மலையின் பெயர் கெர்சீம் என்பதாகும். இந்த மலையைக் குறித்து சமாரியர்களுக்குப் பெருமையும், பெருமதிப்பும் இருந்தது. அந்த பெருமைக்கு அவர்களுக்குக் காரணமும் இருந்தது. (1) ஆதாம் இந்த மலையின் மண்ணினால் தான் உண்டாக்கப்பட்டான் என நம்பினார் (2) நோவா காலத்து ஜலப்பிரளயம் இந்த மலையை மூடவில்லை என விசுவாசித்தனர். (3) யாக்கோபு தேவ தூதனோடு போராடியதும் இந்த மலையில் தான் என நம்பினர். (4) இந்த மலையில் உள்ள ஆலயத்தில் தான் ரெகேமியா காலந்தொட்டு அவருடைய முன்னோர்கள் தொழுது வந்தனர். இந்த மலையை விடுத்து வேறொரு இடத்தில் ஆராதிப்பதென்பது அவர்களுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத காரியம்.

எந்த இடத்தில் ஆராதிப்பது என்பதே இப்பொழுது கேள்வி. எருசலேமில் உள்ள ஆலயமோ தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டது. (1 ஏசா 9 : 3), சமாரியா ஸ்தீரியின் கேள்வியில் பாரம்பரியம் இருந்தது. உண்மையோ இல்லை. ஆனால் கேள்வி அவளுடைய

உணர்வுகளோடு சம்பந்தப்பட்டது. எருசலேமில் என்பது தான் அப்பொழுது பொருத்தமான பதில். ஆனால் அவளுடைய மத நம்பிக்கையின் உணர்வுகள் புண்படக்கூடாது என கிறிஸ்துவானவர் விரும்பினார். அதே சமயம், அவளுடைய கேள்வியையும் தவிர்க்க விரும்பாமல் மிக விரைவில் நடைமுறைக்கு வரப்போகிற ஒரு ஆராதனையை அங்கே வெளிப்படுத்துகிறார். அந்த ஆராதனை தான் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் ஆராதனை (யோவா 4 : 23, 24).

தேவன் ஆவியாயிருக்கிறார். ஆகவே ஆவிக்குரிய தன்மையுடையவர்கள் மட்டுமே அவரை ஆராதிக்க முடியும். 'ஆவியோடும், உண்மையோடும்' அவரைத் தொழுது கொள்ள வேண்டுமென்பது மூன்று முக்கிய காரியங்களை நமக்கு எடுத்துச் சொல்கிறது.

(1) நாம், தேவனை ஆராதிக்க வேண்டும். தேவன் துதிகளுக்குப் பாத்திரமானவர். ஆகவே அவருடைய பிள்ளைகள் அவரை ஆராதிக்க வேண்டும்.

(2) தேவனை ஆவியோடு ஆராதிக்க வேண்டும். ஆவியோடு என்பது நியாயமான, நேர்மையான மனநிலையைக் குறிக்கிறது. நன்றியறிதலோடு கூடிய உணர்வுகள் இருதயத்திலிருந்து புறப்பட வேண்டுமென்பதே அதன் பொருள்.

ஆனால் 'ஆவி' என்பதற்கு இன்று தவறான அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. ஆராதனை நேரத்தில் தேவையில்லாத விநோதமான சத்தங்களை எழுப்பி, ஆராதனையின் மாண்பைக் குறைப்பது, ஆவி எனச் சொல்லப்படுகிறது. ஆவி என்பது சத்தமானால் தேவன் எப்படி ஆவியாயிருக்க முடியும்?

(3) தேவனை உண்மையாக ஆராதிக்க வேண்டும். இங்கு உண்மை என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் Truth என்று சொல்லப்படுகிறது. Truth என்ற ஆங்கில வார்த்தை யோவான் 17 : 17-ல் சத்தியம் என்றும், சத்தியம் தேவனுடைய வார்த்தையாகிய வசனம் என்றும் விளக்கப்பட்டிருக்கிறது.

ஆக உண்மையோடு ஆராதிப்பதென்பது தேவனுடைய வசனம் வெளிப்படுத்தியுள்ளபடி ஆராதிப்பதே. வசனம் பூரணமானது. வசனம் முதலாம் நூற்றாண்டில் இருந்தவர்களுக்கும் நமக்கும் ஒரே விதமாகவே உள்ளது. அப்படியானால் முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தேவனை எப்படி ஆராதித்தார்களென்று வசனம் சொல்கிறதோ, அதே வண்ணம் தான் நாமும் ஆராதிக்க வேண்டும். அந்த ஆராதனைமுறை, ஒழுங்கு இவைகளிலிருந்து, இம்மியளவு தவறு நேர்ந்தாலும் அது உண்மையான ஆராதனையாக இருக்க முடியாது.

புதிய ஏற்பாட்டு ஆதித் திருச்சபைகள் ஏற்றுக் கொள்ளாத எந்த வழிபாட்டு முறைகளையும் நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஆதித் திருச்சபையில் (முதலாம் நூற்றாண்டில்) காணப்பட்ட ஆராதனை அம்சங்கள் :

| | | |
|---|---|---|
| பாட்டுப்பாடுதல் | : | எபே 5 : 19, கொலோ 3 : 16 |
| கிறிஸ்தவ ஈகை | : | 1 கொரி 16 : 12, II கொரி 9 :7 |
| பிரசங்கம் | : | அப் 20 :7 |
| கர்த்தருடைய பந்தி | : | அப் 20 : 7, அப் 2 : 42 |
| ஜெபம் | : | அப். 2 : 42 |

இந்த வேதாகம ஒழுங்கின்படி நாம் தேவனை ஆராதித்து ஆசீர்வாதம் பெறுவோம்.

E.Z.S. ராஜநாயகம்.


FREE

**Bible Correspondence Course**
**In major Indian languages**
**Learn Bible**
**At your convenience**

*"The law of the Lord is perfect,*
*Converting the soul :*
*The testimony of the Lord is sure,*
*Making the wise simple.*
*The statutes of the Lord are right,*
*Rejoicing the heart :*
*The commandment of the Lord is pure,*
*Enlightening the eyes.*
*The fear of the Lord is clean,*
*Enduring for ever :*
*The judgments of the Lord are true,*
*And righteous altogether."*
*Psalms 19 : 7-9*

Encourage your family and neighbors to study Bible.

Call or write today
**Linguistic coordinator,**
**The Bible Correspondence Course Division,**
13, Sainagar, Madras - 600 028. India.
Telephone : (044) 537-0882.

## பரிசுத்த ஆவியானவரை அறிமுகப்படுத்துகிறோம்

(பெரும் விவாதத்திற்குரியவராக இன்று பலராலும் கருதப்படும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய உண்மைகளை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எனவே, பரிசுத்த ஆவியானவரின் பணி என்னும் கட்டுரைத் தொகுப்பிலிருந்து, முதலாவதாக இங்கு அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம். அடுத்து வரும் இதழ்களில் அவரின் இன்றைய பணி பற்றிய பல விவரங்களை தொடர்ந்து பார்ப்போம்)

பரிசுத்த ஆவி என்றால் யார்? அவர் எங்கிருந்து வந்தார்? இன்று இவ்வுலகில் அவருடைய பணி என்ன? மேலும் அவரைப் பற்றிய பல காரியங்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் மூன்றாவது நபராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன், கிறிஸ்து அடுத்து பரிசுத்த ஆவியானவர். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து . . . " (மத் 28 : 19) என அப்போஸ்தலர்களிடம் கிறிஸ்து கூறிய போதும் அதே வரிசையில் குறிப்பிடுகிறார். ஒரே தேவன், ஒரே கிறிஸ்து. ஒரே ஆவி உண்டு என எபேசியருக்கு எழுதிய நிருபம் 4ம் அதிகாரம் 4-6 வசனங்களில் பவுல் கூறுகிறார். ரோமக் கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதும் போது, "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னாடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். (ரோமர் 15 :32) என்கிறார். மீண்டுமாக, 2 கொரிந்தியர் 13:14ம் வசனத்தில் இம்மூவரையும் பற்றிக் கூறுகிறார். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக, ஆமென்.

தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் என மூன்று பேர் இருப்பதால், சிலர் 'திருத்துவம்' எனக் குறிப்பிடுகின்றனர். மூன்று தனிப்பட்ட நபர்களாக அவர்கள் இருந்தபோதிலும், அவர்கள் ஒருவரே. இதைப்புரிந்து கொள்ள பலர் சிரமப்படுகின்றனர். மூன்று தேவர்கள் இருப்பதாக நம்ப சிலர் விரும்புகின்றனர். இக்கூற்றை நியாயப்படுத்த, இயேசுவே பிதாவாகிய தேவனும், இயேசுவே பரிசுத்த ஆவியாகவும்

உள்ளார் எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட போதனையானது 'இயேசு மட்டுமே' என்ற கொள்கையின் விளைவு. சந்தேகமின்றி, அது தவறு. ஒரு தேவன், ஒரு கிறிஸ்து, ஒரு பரிசுத்த ஆவி இவர்கள் தனித்தனியான நபர்கள் அல்லது தேவத்துவத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், மூவரும் ஒருவரே என்பது சாத்தியமா என புரிந்து கொள்ள சிரமப்பட்ட போதிலும், வேதாகமம் இதையே போதிப்பதால் நாம் விசுவாசத்தோடே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் ஒன்று எனக்கூறி திருத்துவம் என்ற வார்த்தை சுவிசேஷத்தில் குறிப்பிடப்படவில்லை என்ற போதிலும், தேவத்துவம் என அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அத்தேனே, பட்டணத்தாருக்கு பவுல் போதிக்கும் போது, "நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (அப். 17:29) எந்றார். தேவனை மறுதலித்தவர்களைப் பார்த்து பவுல் பேசும்போது, "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" (ரோமார் 1:20) என்று கூறினார். கிறிஸ்துவைக் குறித்து பவுல், "ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ 2:9) என்று கூறினார். எனவே இவ்வசனங்களில் பயன்படுத்தப்பட்ட தேவத்துவம் என்பது தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவி ஆகிய மூவரின் இணைப்பு ஆகும்.

இந்த தேவத்துவம் எவ்வளவு காலமாக நீடிக்கிறது? எங்கே ஒருவரைப் பற்றி நாம் படிக்கிறோமோ, மற்றவர்களைப் பற்றியும் அங்கே காண்கிறோம். அவர்கள் சிருஷ்டிப்புக்கு முன்பாகவே இருந்தனர் அல்லது ஆரம்பமும் முடிவுமற்ற தெய்வமாக இருக்கின்றனர் என்பதை, சகலமும் உண்டாக்கப்படும் வேளையில் முதல் முதலாக அவர்களைப் பற்றி நாம் படிக்கிறோம். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" - (ஆதி 1:1) என வேதாகமத்தின் முதல் வசனமே கூறுகிறது. எபிரேய மொழியில் தேவன் என்பது பிதாவாகிய தேவன், அவருடைய குமாரன் கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு சொல். மீண்டுமாக, சிருஷ்டிப்பைப் பற்றி நாம் படிக்கும் போது, "பின்பு தேவன், நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக . . . ." (ஆதி 2 : 26 என்றார். தாவீது எழுதும் போது, "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும் போது, அவைகள்

சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்" (சங் 104 : 30) என்றார். "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" (யோபு 33 : 4) என யோபு தெரிவித்தார், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவான் 1 : 1 -3) என யோவான் கூறினார். தேவத்துவத்தின் மூன்று பேரும் ஆதியில் இருந்தனர்; எனவே எப்போதும் இருந்து கொண்டிருக்கின்றனர் என்பதை மேற்கண்ட எல்லா வசனங்களின் மூலமாகவும் நாம் தெளிவாகக் காணக்கூடும் என நான் நம்புகிறேன்.

'தேவத்துவத்தின்' ஒவ்வொருவரையும் பற்றி நாம் படிக்கும்போது, ஒவ்வொருவரும் ஒரு செயலை அல்லது பணியைச் செய்யக்கூடியவராயிருந்தனர் என்பதைக் காணமுடியும். பழைய ஏற்பாடு கால முழுவதும் மட்டுமின்றி, புதிய ஏற்பாடு காலத்திலும் இதைக்காண முடிகிறது. சுவிசேஷத்தை எழுதவும், அவை பத்திரப்படுத்தப்பட்டு நமது காலம் வரை கொண்டு வரப்படவும் பலரை ஏவி அவர்களுக்கு உதவியவர் குறிப்பாக பரிசுத்த ஆவியானவர் ஆவார். பேதுரு எழுதினார்; "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடைய தாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். "தேவத்துவத்தின் மூன்று பேரும் இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை நீங்கள் மீண்டும் காண முடியும். ஆனாலும் குறிப்பாக சுவிசேஷம் அளிக்கப்பட்டதில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்

செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரஜோயனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ 16, 17) என அப்போஸ்தலர் பவுல் எழுதினார்.

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் 88 இடங்களில் 18 பெயர்களில் காணப்படுவதாகத் தெரிகிறது. அதே நேரத்தில், 264 இடங்களில் 39 வித்தியாசமான பெயர்களால் புதிய ஏற்பாட்டில் அழைக்கப்படுகிறார். இவற்றின் 5 பெயர்கள் இரு ஏற்பாடுகளிலும் பொதுவாகக் காணப்படுகிறது. அதே சமயத்தில் வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் 52 மாறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

அநேகமாக, ஒருவித மறை பொருளான சக்தியாகவோ, ஆவியாகவோ பரிசுத்த ஆவியானவர் சித்தரிக்கப்படுகிறார். ஆனால் சுவிசேஷமோ ஆளுமை செய்யும் ஒரு ஆளாக பரிசுத்த ஆவியானவரை வர்ணிக்கிறது. அவர் உணர்ச்சி வசப்படக் கூடியவர் (எபே 4 : 30), இதயம் உள்ளவர் (ரோ 8 : 27) பேசக் கூடியவர் (1 தீமோ 4 : 1) நமது பலவீனங்களில் உதவி செய்பவர் (ரோ 8 : 26). . . இன்னும் நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்.

நீங்கள் பார்க்கிறபடி, பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. இது ஆரம்பமே. அடுத்து வரும் இதழ்களில் அவரைப் பற்றி தொடர்ந்து தெரிந்து கொள்வோம்.

**J.C. சோட்.**

## புதிய ஏற்பாடு

| பிரிவு | புத்தகங்கள் | பொருள் |
|---|---|---|
| நற்செய்தி நூல்கள் | மத் - யோவான் | கிறிஸ்துவின் வாழ்க்கை |
| சரித்திரம் | அப். நடபடிகள் | கிறிஸ்தவனாவது எப்படி |
| நிருபங்கள் | ரோமர் - யூதா | கிறிஸ்தவனாக வாழ்வது எப்படி |
| தீர்க்கதரிசனம் | வெளி விசேஷம் | கிறிஸ்தவனின் நம்பிக்கை |

## பெண்கள் பகுதி

# பிள்ளைப் பேற்றினாலே பெண்கள் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்கள்?

"...... பிள்ளைப் பேற்றினாலே (அவள்) இரட்சிக்கப்படுவாள்" என I தீமோத்தேயு 2:.15ம் வசனம் கூறுவதின் பொருள் என்ன?

இக்கேள்விக்கு விடையாக பல மாறுபட்ட விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. கீழ்க்கண்டவை அவற்றில் சில.

1. குழந்தைகளை பெறும் பெண்களுக்கு மட்டுமே நித்திய இரட்சிப்பு உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

2. குழந்தைகளைப் பெறும்போது பரிசுத்தமான பெண்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

3. "பிள்ளை" (இயேசு) பிறந்ததின் மூலமாக பரிசுத்தமான பெண்கள் நித்திய இரட்சிப்பை பெற்றுள்ளனர்.

4. விசுவாசத்தில் தொடர்ந்து நீடித்திருந்தால், பிள்ளை வளர்ப்பில் முழு ஈடுபாடுள்ள பரிசுத்தமான பெண்களுக்கு இரட்சிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்துவ ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டளையிடப்பட்ட பணிகளுக்குள் ஒரு ஒத்துப்பார்க்கும் தன்மையை திமோத்தேயு 2 : 8, 3 : 1 ஆகிய தொடர் வசனங்கள் காட்டுகின்றன.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான சில ஆவிக்குரிய குணங்களைப் பற்றி கலாத்தியர் 5:22-23. 2 பேதுரு 1:5-8 வசனங்களில் காணமுடிகிறது.

a) கோபமும் தர்க்கமும் இன்றி பரிசுத்தமாக இருத்தல் (1 தீமோ 2 ! 8)

b) படாடோபமற்ற அடக்கமான குணம் (1 திமோ : 2 ! 9)

c) தேவபக்தி நற்கிரியைகள் (1 திமோ. 2! 10)

d) தெளிந்த புத்தி, விசுவாசம், அன்பு, பரிசுத்தம் (1 தீமோ 2 ! 15)

கிறிஸ்துவ ஆண்களுக்கும், பெண்களுக்கும் சில குறிப்பிட்ட நடைமுறை பணிகள் பற்றியும் நாம் வசனங்களில் காண்கிறோம்.

a. ஆண்கள்: மட்டுமே பொது ஆராதனைகளை நடத்த வேண்டும். (வ.8.12) பெண்கள் "எல்லாவற்றிலும் அடக்கமுடையவர்களாயிருந்து, அமைதியோடு கற்றுக் கொள்ளக்கடவர்கள் (வ.12)

b. பெண்கள் : பொது ஆராதனைகளை நடந்தவோ அங்கு ஜெபங்களைத் தொடங்கவோ கூடாது. என்றலும் தங்களுடைய முக்கியமான பணியாகிய தாய்மையை செம்மையாகக் கவனிக்கும் பெண்கள், ஆண்களுக்கு இணையாக இரட்சிப்பு அடைகின்றனர்.

தொடக்கத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பொறுத்தமான விடையாக 4வது எண்ணில் காணும் "விசுவாசத்தில் தொடர்ந்து நீடித்திருந்தால், பிள்ளை வளர்ப்பில் முழு ஈடுபாடுள்ள பரிசுத்தமான பெண்களுக்கு இரட்சிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது." என்பதே ஆகும்.

சகல கிறிஸ்தவர்களும் நற்கிரியைகளைச் செய்யவேண்டியது இரட்சிப்புக்கு அவசியமாகும். (லூக் 110 : 25 -37; மத். 25 : 31 - 40; எபி 13 : 16 யாக் :2 : 14 - 26)

ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுதியுள்ள ஆண்கள் சபையில் விரும்பக்கூடிய நல்ல பணிகளில் ஒன்று 'கண்காணி' என்னும் பதவி. இது சபையை விசாரிக்கும் ஒரு நல்ல வேலை (1 தீமோ 131 1)

அதுபோல பெண்களுக்குள்ள சிறந்த பணிகளில் ஒன்று குழந்தைகளைப் பெற்று அவர்களை நல்வழியில் வளர்ப்பதாகும். (2 திமோ 1 : 5, 3 : 15)

திருமணம் செய்வதைவிட, பிரம்மசாரியாக இருப்பது மேல் என்ற தவறான எண்ணத்தை (1 திமோ 1 4 : 1 -3) மக்கள் மனதில் பரவலாக விதைத்திருந்தபடியால், குடும்ப பொறுப்புகள் அற்றவனே கர்த்தருக்கு ஊழியம் செய்ய தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொள்ள இயலும் என்றும், எனவே அவன் இரட்சிக்கப்படுவான் என்றும் கருதப்பட்டது.

ஆனால் வீட்டைக் கவனித்துக் கொள்வது. எல்லா கிறிஸ்தவர்களும் செய்ய வேண்டுமென கர்த்தர் விரும்பும் "நல்ல வேளைகளில்" ஒரு பகுதியே.

உதவி பெற தகுதியுள்ள விதவைகளைப் பற்றி பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதிய பவுல். அத்தகுதிகளைப் பட்டியலிடும் போது, கிறிஸ்துவ மனைவி, தாய் ஆகியோர்களின் மதிப்பை கர்த்தர் எவ்வளவு கனம் செய்கிறார் என்பதைக் காண முடிகிறது. "பிள்ளைகளை வளர்த்து அந்நியரை உபசரித்து பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரப்படுகிறவர்களுக்கு உதவி செய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து, நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். (1 திமோ. 5 : 10).

இவ்வாறாக "விசுவாசத்திலும், அன்பிலும் பரிசுத்தத்திலும் அடக்கத்துடன் நீடித்திருந்தால், பிள்ளை பேற்றினாலே அவள் இரட்சிக்கப்படுவாள்"

"மேலும் நீங்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்கு பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப் பட்டிருக்கிறவர்களென்று, அறிந்து ஆசீர்வதியுங்கள்". (1 பேதுரு 3:8,9)

**தமிழில் : - ரேச்சல் நாயகம்.**

## உங்களிடமே பேசிப் பாருங்களேன்!

"என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக" (சங்கீதம் 19 : 14).

சங்கீதம் 23 ஒரு இணையற்ற பாடல் தொகுப்பு. சங்கீதக்காரன் தனக்குத்தானே பேசுகிறார். "நான்", "எனது", "என்னை" என்ற வார்த்தைகளை எத்தனை முறை தாவீது பயன்படுத்தியுள்ளார் என்பதை எண்ணிப் பாருங்கள். அசைக்க முடியாத விசுவாசம் அதிசயங்களை செய்யவல்லது! ஒருவருடைய அமைதியான வாழ்வில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் தங்க முடியும்.

மனிதன் தனது இருதயத்தில் எப்படி சிந்திக்கிறானோ அவ்வாறே அவன் இருக்கிறான். (நீதி 23 : 7) பவுல் சிறைச் சாலையில் துன்பப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலும் கூட, "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4 : 13) எனக் கூறினார். சவுலால் முற்றுகையிடப்பட்ட போதிலும், தாவீது "கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்" (1 சாமுவேல் 30 : 6) ஒருவன் தன்னிடம் தானே பேசிக்கொள்ளுவதால் நல்ல மனநிலையை அடையக்கூடும்.

(1) நீங்கள் கோபமாக இருக்கும் போது, உங்களிடமே பேசிப்பாருங்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் கிடைக்கப்பெற்ற மிகப் பெரிய அழிவு சக்திகளில் ஒன்று கோபம் ஆகும். "எவரும் கோபப்படக்கூடும். அது எளிது; ஆனால் சரியான மனிதரோடு, சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக, சரியான வழியில் கோபப்படுவது - ஒருவருடைய கட்டுப்பாட்டிற்குள் இல்லை; அது எளிதும் அல்ல". (அரிஸ்டாட்டில்) கோபப்படும் போது எபேசியர் 4:26-27 வசனங்களைப் படியுங்கள்."நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்".

(2) உங்கள் குழந்தை உங்களை கோபப்படுத்தினால், அந்த பிரச்சினையை கையாள சிறந்த வழி எதுவென நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். உங்களோடு பேசுங்கள். அவசரக் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசாதீர்கள். எப்போதுமே உங்களை அடக்கிக் கொண்டு, அமைதியாக இருங்கள். குழந்தைகளை ஒரு போதும் திட்டாதீர்கள். குழந்தைகளைத் திட்டுவது, ஒருபோதும் மாறாத நிரந்தரமான வடுக்களை உண்டாக்கி

விடும். எதற்காக நீங்கள் நிலை குலைந்து போயிருக்கிறீர்கள், எது உங்களைப் பாதித்து, எதற்காக இந்தக் கோபம் என உங்களைத்தானே கேளுங்கள். கட்டுபாட்டை மீறுவது பயன் தருமா? காலம் தான் பிரச்சினைகளை ஆற்றக்கூடிய பெரிய வைத்தியன்.

(3) குடிப்பது உங்கள் பிரட்சனையாக மாறியிருந்தால், உங்களோடு நீங்கள் பேச வேண்டிய நேரம் கடந்து கொண்டிருக்கிறது. குடி ஒரு வீட்டை ஒரு போதும் உருப்பட வைத்ததில்லை; குடி எந்த வீட்டில் 'குடி'யிருக்கிறதோ அங்கே ஓயாத சண்டைகள், நிறைய குழப்பங்கள், அடிதடிகள், மன முறிவுகள் இன்னும் பல அவலங்கள். மதுவுக்கு அடிமையானவனை அது ஆட்டி வைத்து, இழிவுபடுத்தி மோசஞ் செய்கிறது. மது தன்னை எந்த இடத்திலும் நியாயப்படுத்த இயலாது நீதி மொழிகள் 23 : 29 -35 வசனங்களைக் கவனமாகப் படிக்க வேண்டுகிறோம். நீங்கள் மதுவுக்கு அடிமையானவரானால் இதுவே உங்களோடு நீங்கள் பேசி முடிவு எடுக்க வேண்டிய சரியான தருணம். நீங்கள் முயன்றால், உங்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஏதாவது செய்யமுடியும். குடியின் இறுதி விளைவாகிய மரணத்தினின்றும் உங்களைக் காத்துக் கொள்ள மதுவை உடனே விட்டு ஒழிக்க வேண்டுகிறோம்.

(4) குற்றங்கண்டு பிடிக்கும் பழக்கத்தில் நீங்கள் ஊறிப் போயிருந்தால், இந்த படுமோசமான பாவத்தைப் பற்றி நீங்கள் உடனடியாக பேச வேண்டிய நேரம் இதுவே. இப்படியான ஒரு பிரச்சினை பற்றி இயேசு எச்சரித்தார். (மத். 7:1-4) நிச்சயமாக, "நீதியின்படி தீர்ப்பு செய்ய" நமக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. (யோ 7:4) பிறர் கூறும் எதையும் உடனே எதிர்க்கும் குணம் படைத்தோரும் இருக்கிறார்கள். சந்தேகமில்லை. கெட்ட காரியங்கள் இருப்பதை நாம் தாராளமாக ஒப்புக் கொள்ளுகிறோம் என்றாலும், நல்லவற்றை எல்லாம் விட்டுவிட்டு கெட்டதை மட்டுமே ஏன் பார்த்துக் கொண்டு அலைய வேண்டும்? கெட்டுப்போன ஆப்பிள் பழங்கள் கூடையில் இருக்கின்றன. அதற்காக கூடை முழுவதும் கெட்ட ஆப்பிள் பழங்களா?

கிறிஸ்தவர்கள் என தங்களை உரிமையுடன் கூறிக் கொள்ளும் சில ஆண்களும், பெண்களும், சபை மூப்பர்கள், உதவிக்காரர்கள், பாட்டு நடத்துனர், வேதாகமப்பள்ளி ஆசிரியர்கள் போன்றோர்களைப் பற்றி எப்போதும் குற்றங்கண்டு பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் சக கிறிஸ்தவர்களைப் பற்றி ஒரு போதும் நல்ல காரியங்களை மறந்தும் சொல்லுவதில்லை. இப்படிப்பட்ட "வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ" என விமர்சனம் செய்வோர் கிறிஸ்துவின் காரியங்களுக்கு நிறைய பாதிப்புகளை ஏற்படுத்து கிறார்கள் என்பதை அவர்கள் உணருவதில்லை. (எபே 4 : 31 - 32)

ஒரு உதாரணத்தைப் பாருங்கள், வியட்நாம் போரின் போது, ஒரு குறிப்பிட்ட நகரத்தைப் பற்றி ஒரு தளபதியிடம் கேட்டபோது அவர் கூறினார். "அந்த நகரத்தைப் பாதுகாக்க ஒரே வழி அதை அழிப்பதே" வெட்கம்! வெட்கம்!! கிறிஸ்துவின் சபையை பாதுகாக்கும் ஒரே வழி அதை அழிப்பது தான் என சிலர் நினைக்கக் கூடுமோ? ஓ, கிறிஸ்துவனே! நீ ஆக்குபவனாக இரு; அழிப்பவனாக வேண்டாம்! உன்னுடன் தானே நீ பேசிப்பார்.

(5) இருண்ட, எதிர்மறையான ஒரு குணம் படைத்தவரா, நீங்கள்? அப்படியானால், உடனே உங்களோடு பேசுங்கள். சரீர, ஆத்ம வளர்ச்சிகள் யாவும் மனதில் உற்பத்தியாகின்றன (ரோ 12:12) "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி . . ." (எபே 4 : 23) கீழே பூமியைப் பாருங்கள், மண்ணைத்தான் பார்ப்பீர்கள்; மேலே பாருங்கள் - மின்னும் நட்சத்திரங்கள். ஒரு தடவை, புயலுக்கிடையில் நான் ஒரு பெரிய விமானத்தில் பயணம் செய்யும் போது, விமானம் தரையை விட்டு வானத்தில் செலுத்தப்பட்ட சில நொடிகளில் சூரிய வெளிச்சம் பிரகாசமாகத் தெரிந்தது. கீழேயோ இருண்ட புயல், வியாதி, வேதனை, துன்பங்கள், ஊனங்கள் யாவும் நம்மை அலைக்கழிக்கக்கூடும். ஆனாலும் நினைவில் கொள்ளுங்கள், இவையாவும் விரைவில் மறைந்து போகக் கூடியவைகளே! (யோ 14 : 1-6).

(6) பிறருடன் ஒத்துப்போக முடிவதில்லையா? சில வேளைகளில், ஆளுமை மோதல்கள் ஏற்படக்கூடும்; ஆனாலும் அது எல்லாருக்கும் உள்ள குணமே. (ரோ 12:18) ". . . . நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாயப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நய வசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர் 16 : 17 -28) யாரிடமும் எடுத்தெறிந்து பேசாதீர்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற மனோ பாவத்துடன், சிறிது கருணையும் கலந்து, அசையாத நம்பிக்கையோடு, கனிவாக உபசரிக்கும் குணமும் இணையும் போது எப்படிப்பட்ட குணம் படைத்த மக்களையும் கவர முடியும். இப்படிப்பட்ட கவரும் கவசத்தை முகத்தில் எப்போதும் தரித்திருங்கள். நல்ல காரியங்களில் நீங்கள் பிறருடன் இணைந்து செயல்பட இயலும் (1 கொரி 3 : 9, 2 கொரி 6 : 1)

(7) உங்கள் மண வாழ்வும், குடும்பமும் முற்றிலுமாக சிறப்புடன் செயல்பட வேண்டுமா? உங்களிடமே நீங்கள் பேசிப்பாருங்கள். உங்கள் வீட்டை சின்னாபின்னமாக்குவது பற்றி பேசுவதற்குப் பதிலாக, அதை காப்பாற்றுவது எப்படி என்பது பற்றி பேசுங்கள். உங்கள் குடும்பம் ஒரே அணியாக வாழவேண்டும், ஒரே குழுவாகப் பணியாற்ற வேண்டும், சபை ஆராதனைக்கு கூட்டாக கலந்து கொள்ள வேண்டும். இவ்வழியைப் பின்பற்றினால், நீங்கள் ஏறக்குறைய எல்லா காரியங்களையும் சாதிக்க முடியும். நல்ல முன் மாதிரியான குணம் இல்லாமையே குடும்பங்களில் இன்று பிளவு ஏற்பட மிக முக்கிய காரணமாகும். தந்தையும் தாயும் தான் முன் மாதிரியாக நடந்து காட்டவேண்டும். குடும்ப ஒற்றுமை மிகவும் அவசியம். சதா காலமும் சண்டை சச்சரவுகள், ஒருவரை ஒருவர் தரக்குறைவாகப் பேசிக் கொள்வது, ஒழுங்கின்மை, ஒழுக்கமின்மை, கணவன் மனைவிக்கிடையே துரோகம் இப்படியான குணங்கள் யாவும் குடும்பங்களை சின்னாபின்னமாக்கி சிதறடித்து விடும். (எபே 5 : 22 -32, எபி. 13 : 4, மாற்கு 10 : 2 - 12).

S.S. ராஜன் W.A. ஹோலி.

## கிறிஸ்துவின் சபை ஒரு பிரிவினைக் கூட்டமா?

புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்படும் சபையைப் பற்றி நாம் படிக்கும்போது அது ஒரு பிரிவினை சபையோ, குழுவோ அல்லது மதக்கட்சியே அல்ல என்றும் உண்மை நமக்கு தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் வழியில் நடக்கும் "அழைக்கப்பட்டவர்கள்" அல்லது இரட்சிக்கப்பட்ட மக்களே இந்த சபை. கர்த்தருடைய வசனம் போதிக்கப்பட்டு, அந்த நற்செய்தியை மக்கள் விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியும் போதெல்லாம் பிரிவினையற்ற கிறிஸ்துவின் சபையை நீங்கள் காணலாம்! "விதை தேவனுடைய வசனம்" என இயேசு கூறினார். (லூக்கா 8 : 11) இன்றைய நவீன உலகில் "பிரிவினை சபை" என்ற வார்த்தை, வேதாகம வார்த்தையான "சபை"யுடன் குழப்பப்படுகிறது. இது மிகவும் துர் அதிர்ஷ்டமான காரியம். ஏனெனில், புதிய ஏற்பாடில் விவரிக்கப்படும் சபை, "பிரிவினையற்ற சபை"யாக இருக்க வேண்டும். கிறிஸ்துவைத் தவிர வேறு தலைவர் இதற்கு இல்லை; இவ்வுலகில் அதற்கு தலைமையகம் எதுவும் கிடையாது; கிறிஸ்துவின் சட்டங்களைத் தவிர வேறு எந்த மனிதச் சட்டங்களும் இந்த சபையில் ஒரு மனிதனை இணைக்காது; புதிய ஏற்பாட்டில் காணப்படும் பெயர்களைத் தவிர வே:று பெயர் இதற்கு இல்லை; சுவிசேஷத்தில் விளக்கப்பட்ட எளிய முறையே அல்லாது வேறு நிறுவன அமைப்புகள் எதுவும் இந்த சபைக்குக் கிடையாது; தன்னைப் பின்பற்றுவோர் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்பட வேண்டுமென கிறிஸ்து விரும்புகிறார், வேறு எந்தப் பெயராலும் அல்ல. மாறுபட்ட போட்டிப் பெயர்களும், மதச்சட்ட நூல்களும், நிறுவன அமைப்புகளும், மனிதனை மதத்தலைவனாக ஏற்றுக் கொள்ளுவதும், பிரிவினைகளும், கட்சிகளும், குழுக்களும் கிறிஸ்துவுக்கு ஏற்புடையவையல்ல. கிறிஸ்துவின் சபை பிரிவினையற்றது. அது கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் அரசு, கிறிஸ்துவின் மணவாட்டி, பெந்தெகொஸ்தே நாளிலே கிறிஸ்துவின் நற்செய்திக்கு மக்கள் எவ்வாறு கீழ்ப்படிந்தனரோ அவ்வாறு கீழ்ப்படியும் போது, கர்த்தர் அவர்களை சபையில் சேர்க்கிறார். (அப் 2 : 47) கிறிஸ்துவுக்கு உண்மையாக நடக்கும் உலகிலுள்ள சகல கிறிஸ்தவர் கிறிஸ்துவின் நாமத்தினாலேயும், அவர்களுடைய சகோதர அன்பினாலும் ஒருவொருக்கொருவர் இணைக்கப்பட்டுள்ளனர்.

**எஸ்.எஸ். ராஜன்.**

## ஞானஸ்நானம் கொடுக்க மறுக்கலாமா?

கர்த்தர் நற்செய்தியைப் போதிக்க நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (மாற்கு 16:15,16) அதை நாம் கடைபிடிக்கிறபோது, ஒருவர் அல்லது மேற்பட்டோர் ஞானஸ்நானம் பெற விரும்பினால், அதற்கான காரணம் எதுவையும் அவர்களிடம் கேட்காமல், அவர்களுடைய விருப்பப்படியே ஞானஸ்நானம் கொடுக்க நாம் கடமைப்பட்டுள்ளோம் என நம்புகிற பலர் நம்மிடையே உள்ளனர். என்னுடைய சொந்தக் கருத்துக்கு இது ஏற்புடையதல்ல. அவர்கள் முறையாகக் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனரா? அவற்றைப் புரிந்து கொண்டனரா? இரட்சிக்கப்பட, கர்த்தரின் சபையில் இணைத்துக் கொள்ளப்பட, அவர்களிடமிருந்து கர்த்தர் எதிர்பார்க்கிறவைகளை கூடுமான வரையில் நிறைவேற்றுவார்களா? இக்கேள்விகள் யாவற்றுக்கும் "ஆம்" என்ற பதிலை அவர்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன். ஏனெனில் கர்த்தர் இக்காரியத்தில் என்னை பொறுப்பாக்குகிறார் என நான் நம்புகிறேன்.

அவர்களுடைய மனதிற்குள் புகுந்து அவர்களுடைய எண்ணங்களை அறிய என்னால் இயலாது என்பது உண்மையே. என்றாலும் அவர்கள் கற்றுக் கொண்டவைகளை முற்றிலுமாகப் புரியவில்லை என்றோ அல்லது அவர்களுடைய சகல பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்படவோ, கிறிஸ்துவை தேவனின் குமாரன் என்று அறிக்கையிடவோ விரும்பவில்லை என்றோ அவர்களுடைய பதில் நடவடிக்கைகள் என்னை நம்பத்தூண்டினால், இன்னும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என நான் கருதவேண்டும். மீண்டும் மீண்டுமாக இத்தகைய காரியங்களைப் போதித்து, வேதாகமம் போதிப்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர் என நான் நிச்சயப்படுத்திக்கொண்ட பின்பும், அவர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளாமல், கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாதபட்சத்தில், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை மறுப்பதைத் தவிர வேறு வழி எனக்கு இல்லை. எப்படியிருப்பினும், கர்த்தருக்குக் கீழ்ப்படிய விருப்பமில்லாவிடில், எவ்வாறு அவர்கள் இரட்சிப்படைய இயலும்? நான் எவ்வாறு சுவிசேஷத்தின்படி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியும்? அதுமட்டுமல்ல, இந்த சூழ்நிலையில் அவர்களுக்கு நான் ஞானஸ்நானம் கொடுத்தால், அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதாகவே ஆகும். இப்படிப்பட்ட காரியம் நிச்சயமாக கர்த்தருக்குப் பிரியமற்றதாகவே இருக்கும்.

மேலுமாக, நான் கற்றுக்கொடுத்த ஒருவரிடம், அவரை ஞானஸ்நானப்படுத்தும் முன்னர் சில கேள்விகள் கேட்க எனக்கு பூரண உரிமையும், சுவிசேஷ பொறுப்பும் உள்ளன என நான்

நம்புகிறேன். நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன் என்பதையோ அல்லது எதைக் கற்றுக்கொடுத்தேன் என்பதையோ அந்நபர் புரிந்து கொண்டாரா என்பதை ஒருவேளை நான் அவரிடம் முதலில் கேட்பேன். அடுத்து, ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் அடக்கம் செய்யப்படுவது என்பதை அவர் புரிந்து கொண்டாரா எனக் கேட்பேன். தொடர்ந்து, ஒருவர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றால் அவர் இரட்சிக்கப்படுகிறார் என்பதையும், அவரை கர்த்தர் தனது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார் என்பதையும், அதன் விளைவாக கர்த்தருடைய நாமத்தை அவர் தரித்துக் கொள்ளுகிறார் என்ற உண்மைகளையும் அவர் ஏற்றுக்கொண்டாரா என்பதைக் கேட்பேன். உண்மையைச் சொல்லப்போனால், சபை பற்றிய நிறைய கேள்விகளை அவரிடம் நான் கேட்பேன். ஏனெனில், இக்காரியங்களைப் பற்றி போதுமானபடி ஒருவர் அறிந்து கொள்ளாவிடில், தேவனுக்கு எவ்வாறு கீழ்ப்படிவார்? மேலும், இப்போதே ஒருவர் இந்த காரியங்கள் எல்லாவற்றையும் பற்றி ஒரு சரியான மனநிலையில் இல்லாவிட்டால், பின்னர் பிரச்சனைகள் வரக்கூடும். ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர், சரியாகக் கற்றுத்தரப்பட்டுள்ளார் என்றும், கர்த்தருடைய இரட்சிப்பின் திட்டங்களை சந்திக்க விரும்புகிறார் என்றும், மேற்சொன்னவற்றின் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும் என நான் நம்புகிறேன்.

மேலும், இன்றைய மோசமான சூழ்நிலையில், மணமாகாமல் ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழ்தையும், ஏராளமான மணமுறிவுகளையும், மறுமணங்களையும் காணும் போது, ஒரு மனிதனை ஞானஸ்நானப்படுத்தும் முன்பு அவருடைய மன நிலையைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தில் இருப்பதாக நான் உணருகிறேன். பின்னர், அவன் பாவத்தில் வாழ்ந்து கொண்டு, மனஸ்தாபப்பட மறுப்பானாகில், பிறர் அவற்றை சட்டை செய்யாமல் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து விடக் கூடும். ஆனால், என் மனசாட்சியின்படி என்னால் அவ்வாறு செய்ய முடியாது. இப்படிப்பட்ட மனிதனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதால் பயன் என்ன? இந்நிலையிலுள்ள மனிதன் ஞானஸ்நானம் பெறுவதைப் பற்றி சிந்திக்கலாமா? அப்படிப்பட்டவன், தண்ணீரில் முழுக்கப்பட்டாலும், அது தேவனுடைய கட்டளையை கேலிக்கூத்தாக்கும் செயலாகத்தான் இருக்கும். அது மட்டுமல்ல, அதுவே சரி என்று அம்மனிதனை எண்ணத்தூண்டுவதோடு, பிறருக்கு ஒரு கெட்ட முன்னுதாரணமாகவும் அமைந்து விடுகிறது.

அது மட்டுமல்ல, எப்போதாவது ஒரு மனிதன் மனஸ்தாபப்பட விரும்பவில்லை என்றோ, ஏதாவது ஒரு காரியத்தில் தேவனுக்கு சரியாகக் கீழ்ப்படியவில்லையென்றோ சில அறிகுறிகள் மூலம் தெரியவரும்போது, கர்த்தர் தனது வசனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளபடி, அவருக்குக் கீழ்ப்படிய அம்மனிதன் விரும்பும்வரை, அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது.

இறுதியாக, மனஸ்தாபப்படுவது பற்றிய தேவனுடைய போதனைக்கு ஒருவன் பணிந்து நடக்க விரும்பினால், "கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறாயா?" என அவனைக் கேட்பேன். அதன்பின், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அவன் விசுவாசித்தால் (ரோ 10:10, மத். 10: 32) அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட (அப் 2:38) கர்த்தரால் அவன் இரட்சிக்கப்பட்டு, அவருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்பட (அப் 2:47) தண்ணீரில் அவனை முழுக்கி ஞானஸ்நானப்படுத்த நான் மகிழ்ச்சியடைவேன். மாறாக, அவன் கிறிஸ்துவை அறிக்கை செய்ய மறுத்தால், அல்லது கர்த்தரின் கட்டளையை மீறி நடந்தால், அதாவது, தனது விபச்சாரம் அல்லது வேறு எந்த பாவத்திற்காகிலும் மனஸ்தாபப்பட மறுத்தால், பின்னர் நான் நிச்சயமாக அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுத்து விடுவேன். ஏனெனில் சுவிசேஷத்தின்படி, கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவனுக்கு நான் ஞானஸ்நானம் கொடுக்க முடியாது. உங்களுக்கு நினைவிருக்கும் அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைப் பற்றியும், கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், பிலிப்பு போதித்த பின்னர், தான் ஞானஸ்நானம் பெறத்தடையேது என மந்திரி கேட்க, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என விசுவாசித்தால் தடையேதுமில்லை என பிலிப்பு விளக்கினான். (அப். 8:26-39) கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என தான் விசுவாசிப்பதை சந்தேகத்திற்கிடமின்றி அந்த மந்திரி கூற, அந்த அறிக்கையைக் கேட்ட பிலிப்பு, அவனை ஞானஸ்நானப்படுத்தத் தொடங்கினான் என்றும் தொடர்ந்து சுவிசேஷத்தில் காண முடிகிறது. ஆனால், ஒருவேளை அந்த மந்திரி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்ய விரும்பவில்லை என்றுவைத்துக்கொள்வோம்; 'பரவாயில்லை' என்று கூறி எப்படியோ பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருப்பான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது அந்த மந்திரி தனது முந்தைய மத நம்பிக்கையை விட்டுவிடவோ, அவனுடைய வாழ்வின் பகிரங்கமான சில பாவங்களுக்காக மனஸ்தாபப்பட விரும்பவில்லை என்றாலோ என்ன நடக்கும்? இதையெல்லாம் சட்டை பண்ணாமல், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில் மட்டுமே குறியாக இருந்து, ஒரு வழியாக காரியம் முடிந்தது என நிம்மதியாகப்போவானா? நிச்சயமாக பிலிப்பு அவ்வாறு செய்திருக்க மாட்டான் என உங்களுக்குத் தெரியும். மன்னிப்புக்கென தேவன் விதித்த நிபந்தனைகளை ஏற்று நடக்க விரும்பாத மனிதனுக்கு, நாமும் ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது. அவன் இரட்சிப்படைவதைத் தடுத்துக் கொண்டிருப்பது நான் அல்ல; மாறாக, குற்றவாளி அவனே. தேவனுக்குக் கீழ்ப்படிய ஒருவன் மறுக்கும்போது, என்னையோ வேறு யாரையோ குறை கூறாதீர்கள். கர்த்தருடைய நிபந்தனையின்படி அவரிடம் வருபவர்கள் அனைவரையும் கர்த்தர் மகிழ்வுடன் ஏற்று இரட்சிக்கிறார் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இரட்சிப்பு யாருக்குத் தேவையோ அவன் அந்த நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்று நடக்க வேண்டியவனாக இருக்கிறான். அவ்வாறு நடந்தாலே அவன் இரட்சிப்பை எதிர்பார்க்க முடியும்.

J.C. சோட்.

# ஆவி, ஆத்துமா, சரீரம்

நாம் வாழும் இந்த உலகத்தில் கண் இல்லாத மனிதர் உண்டு, காது கேளாதவர் உண்டு, வாய் பேசாதவர் உண்டு, கை கால் இல்லாதவர் உண்டு. ஆனால், சரீரம் இல்லாத மனிதர் ஒருவரும் உலகில் இருக்க முடியாது. மனிதன் என்றால் சரீரம் என்ற ஒரு உறுப்பு அல்லது ஒரு அமைப்பு இருப்பதைப் போல, அவனுக்குள் என் றென்றும் அழிவில்லாத ஆவி, ஆத்துமா என்கிற உள்ளான தன்மையும் உண்டு. ஆவியில் லாத சரீரம் செத்ததாயிருக்கிறது. (யாக்கோபு 2:26) மரித்துப் போன ஒருவரின் உடலைப் பார்த்து, சம்பந்தப்பட்டவர்கள் துக்கித்து, ''ஐயோ, என்னை விட்டுப் போய் விட்டாயே!" எனக்கூறி, கதறி, அழுவதை நம்முடைய அன்றாட வாழ்க் கையில் நாம் கண்கூடாகப் பார்க் கிறோம். ஆனால் உடலைவிட்டு எது போயிற்று? எங்கே போயிற்று? என்று அநேகர் யோசிப்பதில்லை. ''தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மண்ணிலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி 2:7) மனுஷனுடைய சரீரம் பூமியின் மண்ணிலிருந்து எடுக் கப்பட்டபடியினால், மண்ணான மனிதன் பூமியின் மண் ணிலேயே வாழ்ந்து, மண்ணில் விளைவதையே ஆகாரமாய்ப் புசித்து, பின் மண்ணுக்கே திரும் புகிறான். இவ்விதமாய் மண்ணானது (சரீரம்) தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் திரும்புகிறது. (சகரியா 12 : 1; நீதி 20 : 27; பிரசங்கி 12 :7)

ஒரு மனித சரீரத்திற்குள் ஜீவன் அல்லது ஆவி இருக்கும் வரையில் அவர், அவன், அவள், சார், ஐயா என்று மரியாதை யோடும் அல்லது பெயர் கூறியும் அல்லது அவர் செய்கிற தொழிலைக் குறிப்பிட்டு டாக்டர், வக்கீல், என்ஜீனியர், ஆசிரியர் என இவ்வாறாக அழைக்கின் றோம். ஆனால், சரீரத்தை விட்டு ஆவி பிரிந்து போன பின், அந்த நபருக்குரிய உடலைப் பார்த்து 'அது' அல்லது 'செத்த பிணம்' என்றே கூறுகிறோம். ஆகவே நாம் ஒருவரிடம் பேசினாலும், அவருடைய உள்ளான ஆவியினி டத்திலேயே நாம் பேசுகிறோம், உரையாடுகிறோம், மகிழ்கிறோம், சம்பந்தம் கலக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. மேலும், ஒருவருடைய சரீரத்தைப் பார்க் கிலும் அவருடைய ஆவி விசேஷித்தவைகளாயிருக்கிறது.

எப்படியெனில், வயிற் றுக்குள் போகும் ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடுத்திக் கொள்ளும் உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித் தவைகளென்றால், ஒருவருடைய சரீரத்தைப் பார்க்கிலும் அல்லது ஒருவருடைய சரீரத்திற்குள் இருக்கும் ஆவி, ஆத்துமா கடவுள் பார்வையில் மிகவும் விசேஷித் தவைகளாய், விலையேறப் பெற்ற தாயிருக்கிறது. சரீரத்தின்

அமைப்புகளிலும், உடலுறுப்பின் வித்தியாசத்திலுமே ஆண், பெண் என வேறுபடுகின்றனேயன்றி உணர்ச்சியிலோ, மனநிலையிலோ, உள்ளான தன்மைகளாகிய ஆவி, ஆத்துமாவிலோ ஆணென்றும், பெண்ணென்றும் வித்தியாசங்கள் இல்லை. மனிதன் சரீரத்திலே வாழும் வாழ்க்கை கொஞ்சக் காலம் மாத்திரமே. ஆனால், உலர்ந்து போகிற புல்லுக்கும், வாடிப் போகிற பூவுக்கும் ஒப்பாயிருக்கிற மனுஷனோ, தனது ஆவிக்குரிய மேன்மையைப் பற்றியும், அதனுடைய சிறப்பான நித்திய வாழ்க்கையைப் பற்றியும் சற்றும் சிந்திக்காமல், இந்த உலகத்தின் அநித்தியமான பாவ சந்தோஷங்களைத் தெரிந்து கொண்டு அதிலே உழன்று, சிக்கித் தன் ஆத்துமாவை (ஜீவனை) நஷ்டப்படுத்திக் கொள்கிறான். நாம் இந்த உலகத்தில் கொஞ்சம் கால வாழ வேண்டியவர்களே, ஆனால் உலகம் நமக்குள் வாழ நாம் எப்போதுமே கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்திலுனாண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." (1 யோ - : 15-17) எனவே பாவ வாழ்க்கையில் மகிழ்ச்சி கொண்டு, தன் ஆத்துமாவைப் பற்றி சிந்திக்காத எவனும் ஞானவானல்லவே. மனிதன் சரீரத்திலே உயிர் வாழ்வதற்கு காற்றும், நீரும், வெப்பமும், உணவும் எப்படி மிக அவசியமோ அதைப்போல; தனது ஆவியிலே நித்திய ஜீவ காலமாய் மகிழ்ச்சியோடு பரலோகத்தில் தேவனோடு கூட வாழ, மெய்யான தேவனைப் பற்றிய அறிவும், கிறிது இயேசுவினால் உண்டாகும் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் பெற வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது.

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது (யோ 6:63) மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது (1 பேதுரு 1 24) மனித சரீரம் வெளித் தோற்றத்தையும் அந்த நபருக்குரிய புறம்பான அடையாளத்தையும் மட்டுமே புலப்படுத்துகிறது. உலகத்திலுள்ளவைகளை நாம் காணவும், சூடாகவோ அல்லது குளுமையாகவோ உணரச் செய்வதும் சரீரமேயாகும். மேலும், குடும்ப உறவுகள் அல்லது இரத்த சம்பந்தமான உறவு முறைகள், சொந்த பந்தங்கள், நட்புறவுகள், சமுதாய அந்தஸ்து, பட்டம், பதவி என உலகத்தோடு தன்னை உறவுபடுத்திக் கொள்வதும் சரீரத்தின் பங்காகும். ஆனால், ஒருவர் மரித்தவுடன் அல்லது அவருடைய சரீரத்தை விட்டு ஆவி பிரிந்து போன பின், அவரது இரத்த சம்பந்தமான உறவுகளோ, உடமைகளோ, தனக்காக சேர்த்து வைத்த ஆஸ்திகளோ, பட்டங்களோ, பதவிகளோ அவரோடு கூட செல்வதில்லை. அல்லது அவைகளையும் தன்னோடு கூட கொண்டு போக முடியாது. மனிதன் தனது சரீரத்திலே தனக்கு குறித்த காலம் வரை

மட்டுமே இந்த பூமியில் வாழ்ந்து, பின் தனது சரீரத்தை இந்த பூமியின் மண்ணுக்கே ஒப்புக் கொடுக்கக் கூடியவனாய் இருக்கிறபடியால், என்றென்றும் அழிவில்லாத தனது ஆவி, ஆத்துமாவை கிறிஸ்து இயேசு வினுடைய ஜீவ பாதையில் வழி நடத்தி நித்திய ஜீவனுக்கேதுவாக தன்னைக் காத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்புள்ள, மிக அவசியமான கடமையாகும்.

மெய்யான தேவனை அறிவதும், அவரோடு கூட தொடர்பு கொள்வதும் அல்லது பொய்யான தெய்வங்களோடோ, ஒன்றுக்கும் உதவாத விக்கிரகங்க ளோடோ சம்பந்தப் படுவதும் அல்லது தெய்வ நம்பிக்கையற்ற தாய் செயலாற்றுவதும் ஆவியின் பகுதியாகும். மேலும், துன்பத்திலே கலங்குவதும், இன்பத்திலே களிகூறுவதும், உயர்விலே இறுமாப்பாயிருப்பதும், தாழ்மை யாயிருப்பதும், பக்திக்குரிய காரியத்திலே அனலாகவோ, குளிராகவோ, அல்லது வெது வெதுப்பாகவோ இருப்பதும் ஆவியின் பகுதியாகும். மனுஷ னுடைய ஆவி தேவனுக்கு விரோதமாகவோ அல்லது அவருக்கு பிரியமாகவோ; நன் மையானதாகவோ, தீமையான தாகவோ; மென்மையானதாக வோ அல்லது கடினமாகவோ; தன்னிச்சையாகவோ, பிறர் கட்டுப்பாட்டிற்குள்ளோ சரீரத்தின் மூலமாக செயலாற்றக் கூடியது. பிறவியிலேயே எந்த மனுஷருடைய ஆவியும் தீமை செய்யக் கூடியதாகவோ, பொல் லாப்புள்ளதாகவோ, வஞ்சக மாகவோ இருப்பதில்லை. நாளை டைவில் மனிதன் தனது சரீரத்திலே வளரும் சூழ்நிலையில் அல்லது நன்மை, தீமை அறியத் தக்கப் பருவத்திலிருந்து பாவம் செய்கிறபடியால் அவனுடைய உள்ளான ஆவி, ஆத்துமாவின் தன்மை தூய்மையிழந்து அசுத்த மாகிறது. பரிசுத்தமில் லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப் பதில்லை (எபி 12 : 14) மேலும் ஒருவர் தனது பாவத்தோட பரலோகத்திற்கு செல்ல முடியாது. பாவம் பரிசுத்தராகிய தே வனுக்கும், மனுஷனுக்கும் நடுவாக பிரிவினையை உண்டாக்குகிறது. (ஏசாயா 59 : 1,2) பாவிகளுக்காக மரித்த கிறிஸ்து இயேசு வினுடைய இரத்தம் சகல பாவங்களையும் மன்னிக்கிறது. பாவியானவன் இரட்சிக்கப்பட கிறிஸ்து இயேசுவினுடைய சுவி சேஷம் தேவபெலனாய் கிருபை செய்கிறது. ஆகவே, நீங்கள் உங்கள் ஆவியினாலே சத்தியத் திற்கு (சுவிசேஷத்திற்கு) கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாவை சுத்தமாக்கிக் கொண்டவர்களாய், சுத்த இருதயத்தோடே தேவ அன்பிலே நடந்து கொள்ள உங்கள் அருகிலுள்ள கிறிஸ் துவின் சபையாரை சந்தியுங்கள். உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. ஆமென்.

**S.செங்கோல் ராயன்**
**பாண்டிச்சேரி.**

# "ஆகிலும், உன் பேரில் எனக்குக் குறை உண்டு"

தியத்தீரா சபைக்கு கர்த்தர் அறிவுரை கொடுத்த போது, "கிரியை, ஊழியம், விசுவாசம், பொறுமை" ஆகிய நற்பண்புகளில் வளர்ந்திருந்த ஒரு சபையாக அதைக் கண்டார் (வெளி 2 : 19) சாத்தானின் பலத்த எதிர்ப்புகளை எல்லாம் சந்தித்து, அவர்கள் இந்த நற்குணங்களை வளர்த்திருந்தனர். அந்நாட்களில், பெரிய சபைகளில் ஒன்றாக அவர்கள் செயல்பட்டார்கள் என கணிக்கலாம். ஒரு அளவுக்கு இது சரியாக இருந்திருக்கும்.

என்ற போதிலும், தியத்தீராவின் அன்றைய நிலையைப் பற்றி கர்த்தர் முற்றிலுமாகப் பிரியப்படவில்லை என்பதை நாம் காண்கிறோம். "ஆகிலும் உன் பேரில் எனக்குக் குறை உண்டு" பிரச்சினை என்ன வெனில் "தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீ யானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிர கங்களுக்குப் படைத்தவை களைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ் சிக்கும்படி நீ அவருக்கு இடங் கொடுக்கிறாய்" (வெளி. 2 : 20)

பிரச்சினை என்ன? சபையில் ஒரு பெண் தவறாகப் போதித்துக் கொண்டிருந்தாள். சபை அதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருந்தது. அவளுடைய கள்ளப் போதனைக்கு அவர்கள் இடங்கொடுத்ததின் விளைவாக, மக்கள் பாவ வாழ்க்கையில் தள்ளப்பட்டனர். கள்ளப் போத னைக்கு நாம் இடம் கொடுத்தால், இன்னும் அதே காரியம் நடைபெறும். மக்கள் பாவபடு குழிக்குள் வீழ்ந்து போவர். தவறைப் புறக்கணிப்பது எனக்கு எளிதாகத் தோன்றுகிறது. ஒரு சபையில் நடைபெறும் நல்ல காரியங்களைப் பற்றி நான் நினைக்க விரும்புகிறேன். நற் காரியங்கள் பற்றியே பிரசங்கிக் கவும் விரும்புகிறேன்.

"கிரியை, ஊழியம், விசுவாசம், பொறுமை" ஆகிய பண்புகளில் நாம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து முன்னேறிக் கொண்டிருக்கும் போது, தவறு களைப் பற்றி நாம் பேச விரும்புவதில்லை - அல்லது எதிர் மறையில் சிந்திப்பவன் என நமக்குப்பட்டம் சூட்டி விடுவார் களே.

இந்த இடத்தில் தான் நான் நின்று, நிதானமாக, தவறுக்கு இடமளிப்பதின் விளைவுகள் என்ன என்பதைக் காண வேண்டியவனாக இருக்கிறேன். தியத்தீராவில் யேசபேல் என்ற பெண், பரிசுத்தவான்களை வேசித்தனம் பண்ணவும் விக்கிர கங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் போதித்து அவர்களை வஞ்சித்தாள். அச்செயல்களில் அவள் வெற்றி பெற்றாள். ஏனெனில் அவளுக்கு இடங் கொடுக்கப்பட்டது. எந்தத் தவறையும் நாம் புறக்கணிப் போமானால், நாம் சம்பாதித்த பிற நற்பண்புகளின் பயன்

யாவும் அழிந்து போய் விடுகிறது. ஏனென்றால், மக்கள் பாவத்தில் வீழ்ந்து போகின்றனர். இன்றைய சபைக்கு இது ஒரு பாடமாக அமைகிறது!

நாம் மனிதரைப் பிடிக்கும் செம்படவர்கள். ஏரியில் நான் மீன் பிடிக்கச் செல்லும் போது, அங்கே பாம்புகளைத் தேடி நான் அலைவதில்லை. ஒருவேளை, ஒரு பாம்பு எப்படியோ படகிற்குள் நுழைந்துவிட்டால், அதை நான் கொன்று விடுகிறேன். ஏனெனில் படகிலுள்ள மக்களின் உயிருக்கு பாம்பு ஆபத்தை விளைவிக்கும். நம்மைச் சுற்றிலும் தவறுகளைக் கண்டு பிடித்துக் கொண்டு நாம் அலைவதில்லை. அதேவேளையில், தவறு போதிக்கப்படும்போது அதை நாம் எதிர்க்கிறோம். ஏனெனில் படகிலுள்ளவர்களை அது வீழ்த்திப் போடும்.

தவறு, தந் தலையை சபைக்குள் நீட்டும்போது, உடனே அதைத் துண்டித்து எறியும் சக்தியை தேவன் நமக்குத் தருவராக! தவறை எதிர்த்துக் கொண்டிருப்பது மாத்திரமே கிறிஸ்தவ வளர்ச்சிப் பணி அல்ல என்று அறிந்து கொள்ளும் ஞானத்தை அவர் நமக்கு அளிப்பாராக!

"கிரியை, ஊழியம், விசுவாசம், பொறுமை" ஆகிய நற்பண்புகலில் வளர வேண்டிய அவசியமும் நமக்கு உண்டு.

**ரோன் ஹார்பர்** **Ron Harper.**

## யோவான் கொடுத்த ஞானஸ்நானம்

1. தேவனுடைய கட்டளை (லூக். 7 : 29, 30)
2. மேசியாவின் வருகைக்கான ஆயத்த வேலையின் பகுதி. (யோவா. 1 : 31, லூக். 3 : 3-6)
3. யோவானாலே கொடுக்கப்பட்டது. (மாற். 1:5)
4. பாவத்திற்காய் வருந்தினவர்கள் ஞானஸ் நானம் பெற்றுக் கொண்டனர். (மாற். 1 : 4, 5)
5. இது தண்ணீர் ஞானஸ் நானம் (யோவா 1 : 26)
6. இது மூழ்கிப் பெறுதல் (மாற். 1 : 10, யோவ. 3 : 23)
7. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தால் இது மாற்றப்பட்டது. (அப். 19 : 1-5)

## பயங்கரமான யோசனை

கர்த்தருடைய சபையை பாழாக்கிக் கொண்டு, கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது தான் தேவனுடைய சித்தம் என்று பவுல் எண்ணியிருந்தான். (அப். 26 : 9; 1தீமோ. 1 : 13). தேவனுடைய ஒளியை மறைக்க முயற்சி செய்து, தங்களுக்குள்ளே சிந்தித்துக் கொள்ளுகிறவர்கள் அநேகர் இருக்கின்றனர். மேலும் அவர்கள் பவுல் செய்தவிதமாகவே செய்கிறார்கள்.

இவ்விதமான யோசனை கொண்டவர்கள், தங்களுடைய யோசனை பிரகாரமாகவே செயல்பட்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஒரு மனிதனின் யோசனையே அவனுக்கு தேவனிடத்தில் சேருவதற்கு தடையாக இருக்கின்றது. "என்னுடைய சிந்தனைகள் உங்களுடையதல்ல . . . " என்று கர்த்தர் கூறியிருக்கிறார்.

தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு மனிதனுடைய நேர்மையான குணம் மட்டுமே அல்ல. தேவனோடு ஒப்புரவாவதற்கு ஒரு மனிதனின் உணர்ச்சியையே நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. கிறிஸ்தவர்களை கொலை செய்ய தாம் உதவி செய்த போது, பவுல் மிகவும் சந்தோஷப்பட்டார். நாம் நல்ல காரியம் ஒன்றை செய்கிறோம் என்று எண்ணிக் கொள்வது நம்மை தகுதிப்படுத்தாது. தேவனுடைய வார்த்தையினால் தான் நாம் நடத்தப்பட வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு மட்டுமே நாம் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய சிந்தனையை மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் நாம் பயங்கரமான யோசனையிலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

தமிழில் : பேங்க்ரஸ்.
ஈரோடு.

### இயேசுவினால் மட்டுமே இரட்சிப்பு

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாம மேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."

அப். 4 : 12

# சிலவற்றை மறப்பதே சிறந்தது!

நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சில காரியங்களை சில வேளைகளில் நாம் மறந்து விடுகிறோம்; மறக்க வேண்டியவற்றையோ மறக்காமல் மனதில் வைத்து பாதுகாக்கிறோம். கீழே கவனியுங்கள் :

**1. கடந்த கால காயங்களை மறக்க வேண்டும் : -**

நமக்கு விரோதமாக ஒருவன் பாவஞ்செய்து, பின்னர் அதற்காக மனஸ்தாபப்படுவானாகில் அவனை மன்னிக்கக் கடமைப்பட்டுள்ளோம். (லூக். 17 : 3) கடந்த காலத்தில் நாம் அடைந்த காயங்களை தொடர்ந்து மனதில் இருத்தி, அவற்றையே நினைத்துக் கொண்டிருப்பதில் பயன் எதுவும் இல்லை. நமக்கு விரோதமாக இழைக்கப்பட்ட பாவங்களை நினைத்துக் கொண்டிருப்போமானால், அது உண்மையிலேயே மன்னிப்பா? மன்னிக்கும் போது நாம் மறந்து விடவும் வேண்டும். (எபி 8 : 12).

**2. கடந்த கால தோல்விகளை மறப்போம் : - (பிலி 3 : 13 -14)**

பவுல் தனது கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. பழைய வற்றை மறந்து, புதிய உயர்நிலைக்குச் செல்ல வேண்டியவராக இருந்தார். சபைக்கு விரோதமாக அவர் செயல்பட்ட யாவற்றையும் மறக்க வேண்டியதாயிற்று. (அப் 26 : 9 -11) ஒரு காலத்தில் சபையை துன்புறுத்தவும், பல கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்த தானே காரணமாக இருந்ததையும் அவர் மறக்க வேண்டியதாயிற்று (அப் 8: 1 -3). நாம் செய்திருக்கும் தவறுகளால் கீழே தள்ளப்பட்டு, கடந்த காலத்தில் வாழ்வதை நம்மால் தாங்க இயலுமா? நாம் எவ்வாறு இருந்தோம் தேவனுடைய கிருபையால், இனி எவ்வாறு மாறக்கூடும் என்பதைக் காண நமது கடந்த கால தோல்விகள் நமக்கு உதவ வேண்டும்.

**3. கடந்த கால சாதனைகளை நாம் மறக்க வேண்டும்:**

இல்லையென்றால், நாம் முன்பு எவ்வாறு இருந்தோம் அல்லது இப்போது எவ்வாறு இருக்கிறோம் என்பதில் திருப்தி அடையமாட்டோம். நமது கடந்த கால சாதனைகளைப் பற்றி பெருமையடிப்பதை நிறுத்தும் போது, நாம் நிகழ் காலத்தில் தடுமாறாமல் நிற்க முடியும், நமது சொந்த கால்களில் நின்றே மரணத்தையும் சந்திக்க முடியும், ஒருவனுடைய சாதனைகளை தனக்குள்ளேயே வைத்துக் கொள்ளவும், தன்னை மீறி ஒருபோதும் அவை சென்று விடாமலும் பார்த்துக் கொள்ள முடியும். தங்களுடைய தொடர்ந்த கடின உழைப்பால் பிறர் கிறிஸ்துவுக்குள் நமக்கு வழி அமைத்துள்ளனர். நாம் இன்று அவர்களுடைய உழைப்பில் குளிர் காய்ந்து, நம்முடைய பணி முடிந்தது எனக் கூற முடியாது. முந்தைய ஆசீர்வாதங்கள் எதிர் காலத்திற்குப் போதுமானவையல்ல; பவுலைப்போல நாம் தொடர்ந்து பணி செய்வோம்.

**தமிழில் : S.S. ராஜன்.**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, Oct 1994
OCT 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivered Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST